# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
## UNIT – III – SOCIO ECONOMIC ISSUES
### தகவல் அறியும் உரிமை

**1. தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005**

தகவல் அறியும் உரிமைச்சட்டம் - 2005, அக்டோபர் 2005 முதல் அமலுக்கு வந்தது.

**நோக்கம்:**

நாட்டின் அனைத்துப் பகுதிகலும், அரசு அதிகாரிகளிடம் இருந்து தகவல்களைப் பெறும் உரிமையை, அடிப்படை உரிமையாக மக்களுக்கு வழங்குதல் அரசு அதிகாரிகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வருதல் ஊழலைக் கட்டுப்படுத்துதல், அரசுத்துறைகள், நிறுவனங்கள் மக்களுக்குக் கட்டுப்பட்டுள்ளதை உறுதி செய்தல் போன்ற தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கான ஒரு செயல் வடிவம் தரப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தகவல்கள் அளிப்பதைத் தடை செய்யும் அரசு ஆவணங்கள் ரகசியச் சட்டம் 1923 உள்ளிட்டவை ரத்து.

**அதிகார வரம்பு**

மத்திய, மாநில, யூனியன் பிரதேச அரசுகளால் சொந்தமாகவோ நேரடியாகவோ, நிதி உதவி மூலமாகவோ உருவாக்கப்பட்டுள்ள அனைத்து விதமான அலுவலகங்களும் இச்சட்டத்தின் கீழ் வருகின்றன.

**தகவல்கள் என்பவை**

பதிவேடுகள், ஆவணங்கள், அலுவலகக் குறிப்புகள், மின்னஞ்சல், கருத்துரைகள், ஆலோசனைகள், தகவல் – தரவு என அனைத்தும் அடங்கும்.

**பதிவேடுகள் என்பது**

அனைத்து விதமான ஆவணங்கள், கையெடுத்து மூலப்பிரதிகள், கோப்புகள்

நுண்சுருள், புகைப்படநகல், பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள்

கணினி போன்ற சாதனங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள்

**தகவல் பெறும் உரிமை என்பது**

பணிகள், ஆவணங்கள், பதிவேடுகளை ஆய்வு செய்யும் உரிமை

குறிப்புகள், சுருக்கங்கள் போன்றவற்றைப் பெறும் உரிமை

**மாதிரிகள் எடுக்கும் உரிமை**

நாடாளுமன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் தகவல்களை மறுக்கக் கூடாது.

எந்த நாளும் சட்டங்களை உருவாக்கும் அமைப்புகளுக்குத் தகவல்களை மறுக்கக் கூடாது.

**பாதுகாக்கப்பட வேண்டிய ரகசியங்கள்**

நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நாட்டின் பொருளாதார (ம) அறிவியல் நலன்கள், வெளியுறவு தொடர்பான தகவல்கள் போன்றவை பாதுகாக்கப்பட வேண்டியவை.

**விதிவிலக்கு**

உளவுத்துறை.

தனியார் நிறுவனங்கள் இன்சட்டத்தின் கீழ் வராது.

**2. தகவல் அறியும் உரிமை திருத்தச்சட்டம் – 2019**

**மத்திய தகவல் ஆணையர்**

மாநில தகவல் ஆணையர்களின் நிலை, ஊதியம், பதவிக்காலம் திருத்தம்.

ம.த. ஆணையர் நிலை – தேர்தல் ஆணையர், மாநில தகவல் ஆணையர் – மாநில தலைமைசெயலாள்.

**தாக்கம்**

அதிகாரப் பகிர்வை பாதிக்கும்.

இதன் தன்னாட்சி தன்மை பாதிப்படையும்.
கூட்டாட்சி முறையை பாதிக்கும்.
கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும்.
தகவல் ஆணையர்களின் சுதந்திரத்தை குறைக்கும்.
இச்சட்டம் பலவீனமடையும்.

3. **தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்புகள்.**

1. இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, நாட்டின் பாதுகாப்பு, படைத்திறன், அறிவியல் அல்லது பொருளாதாரம் சார்ந்த நலன்கள், அயல் நாட்டுடன் கொண்டுள்ள உறவை பாதிக்கப்படும் அல்லது குற்றச் செயலினை தூண்டுதலாக அமையும் தகவல்கள்;
2. நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தால் வெளிப்படையாக தடைசெய்யப்பட்ட தகவல்கள் அல்லது அந்த தகவலை வெளிப்படுத்துவதால் நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமையக்கூடிய தகவல்கள்;
3. நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற சிறப்புரிமையை மீறுவதாக அமையும் தகவல்கள்;
4. எந்த ஒரு தகவலானது பொது மக்களின் பேரளவு நலனுக்கு அவசியமானது என்று அரசு கருதுகிறதோ அந்தத் தகவல் மற்றும் மூன்றாம் தரப்பினரின் போட்டி நிலைக்கு தீங்காகும் தகவலான வணிக நம்பகத்தன்மை, வியாபார ரகசியங்கள், அறிவார்ந்த சொத்துடமை உள்ளிட்ட தகவல்கள்;
5. பொது மக்களின் நலனுக்கு தேவையானது என்று அரசால் கருதப்படுகிற, தனி நபர் ஒருவருக்கு கிடைத்த நம்பகத்தன்மை உடைய தகவல்கள்;
6. அயல் நாட்டு அரசிடமிருந்து பெறப்பட்ட ரகசிய தகவல்கள்;
7. நாட்டின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் மற்றும் சட்டத்தினை செயல்படுத்துவதற்காகவும் கிடைத்த மூலம் மற்றும் உதவி ஆதாரங்களை இனங்காட்டக்கூடிய தகவல்கள்;
8. தனி நபர் உயிர் மற்றும் உடலுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய தகவல்கள்;
9. வெளிப்படுத்தப்பட்டால், புலனாய்வு நடவடிக்கைக்கு அல்லது குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு தடையாயிருக்கும் அல்லது குற்ற வழக்கு தொடர்தலைத் தடை செய்திடும் தகவல்கள்;
10. அமைச்சர்கள், குழு செயலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களின் கலந்தாய்வுகள் குறித்த பதிவுருக்கள் உள்ளிட்ட அமைச்சரவை ஆவணங்கள். எனினும் அமைச்சர் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள், அதற்கான காரணங்கள், எதன் அடிப்படையில் அம்முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை, முடிவு எடுக்கப்பட்ட பின்னர், பொது மக்களுக்கு தெரியப்படுத்தலாம்;
11. ஒரு தகவலை வெளியிடுவதால் உள்ள நலன், பாதுகாக்கப்பட்ட நலன்களுக்கான தீங்கை விட மிகுந்து இருக்குமிடத்து, 1923 ம் ஆண்டு அலுவலக சார் ரகசிய சட்டம் 1923 (9/1923) ல் அல்லது தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 8 ன் படி அனுமதிக்கத்தக்க விலக்களிப்புகள் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும் தகவலை அணுகி பெற அனுமதிக்கலாம்;
12. ஒரு விண்ணப்பம் செய்யப்பட்ட தேதிக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம், நிகழ்வு அல்லது நடந்த காரியம் தொடர்பான தகவல்கள், தகவல் சட்டம் 2005 பிரிவு 8 உட்பிரிவு 1 (a, c and I) ல் வகைகளுக்கு உட்பட்டு, கோரிக்கையினை செய்த நபருக்கு தகவல் அளிக்க வேண்டும். இச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு முறைகளுக்கு உட்பட்டு, அந்த 20 ஆண்டு காலத்தினை கணக்கிடுவதில் பிரச்சனை எழும் பட்சத்தில், மத்திய அரசின் முடிவே இறுதியானதாகும்;

13. தகவலை பெறுவதற்கான கோரிக்கையானது, அரசு அல்லாத தனி நபரிடமிருந்து வருகிற பதிப்புரிமையை மீறுவதாக இருக்குமிடத்து, இச்சட்டம் 8ம் பிரிவின் வகை முறைகளுக்கு பாதிப்பின்றி, அக்கோரிக்கையை நிராகரிக்கலாம்.

4. **மத்திய தகவல் ஆணையம் – 2005.**

**தோற்றம்**

தகவல் பெறும் உரிமைச்சட்மட் - 2005 ன் கீழ் உருவானது

அரசியலமைப்பு சார்ந்ததல்ல

**அமைப்பு**

தலைமை தகவல் ஆணையர் – 1

தகவல் ஆணையர்கள் – 10

சட்டம், அறிவியல், சமூகம், மேலாண்மை, தொழில்நுட்ப அனுபவம், அறிவு உடையவர்கள்

**தேர்வுக்குழு**

பிரதமர்

எதிர்கட்சித் தலைவர்

அமைச்சரவைக்குழு

**பதவிக்காலம் (ம) நியமனம்**

5 ஆண்டுகள் / 65 வயது

நியமனம் – குடியரசுத் தலைவர்

**பணிகள்**

1. பின்வருபவர்களுக்கு புகார் பெற்று விசாரணை செய்தல்
2. கேட்கப்பட்ட தகவல் மறுக்கப்பட்ட ஒருவர்
3. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தகவல் கிடைக்கப்பெறாதவர்
4. விதிக்கப்பட்ட கட்டணம் அதிகம் என கருதுபவர்
5. தன்னிச்சையான அதிகாரம்
6. எந்த ஒரு பொருள் தொடர்பாகவும், போதியகாரணம் இருப்பின் தானாகவே விசாரணைக்கு ஆணையிடலாம்.
7. மாநகரக உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஈடான அதிகாரம்
8. தனிநபரை விசாரணைக்கு அழைத்தல்
9. எந்த ஒரு நீதிமன்றம் / அலுவலகத்திலிருந்தும் கோப்புகளை பெறுதல்
10. ஆவணங்களைக் கண்டுபிடித்து ஆய்வு செய்தல்
11. பிற அமைப்புகளுக்கு கட்டளையிடுதல்
12. குறிப்பிட்ட படிவத்தில் தகவல்கள் தருமாறு கோருதல்
13. அலுவலர்களுக்கு பயிற்சி ஒதுக்கீடு
14. பொதுத்துறை அலுவலர்களிடமிருந்து ஆண்டறிக்கை

5. **மாநில தகவல் ஆணையம்.**

**தோற்றம்**

தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005 ன் படி உருவாக்கம்

தமிழ்நாட்டில் 2005 ல் உருவாக்கம்

**அமைப்பு**

தலைமை தகவல் ஆணையர் – 1

தகவல் ஆணையர்கள் – 10 க்கு மிகாமல் (தற்போது 6 பேர் உள்ளனர்)

சமூகம், அறிவியல், தொழில்நுட்பம், சட்டம், மேலாண்மை தொடர்பான அறிவுடையோர்

**பதவிக்காலம் (ம) நியமணம்**

5 ஆண்டுகள் / 65 வயது

நியமனம் – ஆளுநர்

**அதிகாரம்**

குடிமையியல் நீதிமன்றத்திற்கு ஈடான அதிகாரம்

விசாரணையின்போது எந்தவொரு நபரையும் சாட்சியாக எழுத்துப்பூர்வமான தகவல் பெறலாம்.

எந்த நிறுவனத்திலும் கோப்புகள் பெறலாம்.

**6. தமிழ்நாடு தகவல் ஆணையம்.**

1. பொது அதிகார அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமையை குடிமக்களுக்கு வழங்குவதற்கும், ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழிவகுக்கின்றது. ஆளுமையின் பல்வேறு அடுக்குகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய நற்பண்புகளில் பொதிந்துள்ள மக்களாட்சியின் உண்மையான உணர்வை இது வெளிப்படுத்துகிறது.
2. இதனடிப்படையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, மாநில தகவல் ஆணையத்தால் செயல்படுத்தப்படுகிறது.
3. மேலும், அனைத்துத் துறைகளும் தத்தமது துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் நலதிட்டங்கள் மற்றும் இதர பொது முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் அனைத்தையும் தாமாகவே முன்வந்து வெளியிட்டுவருகின்றன.
4. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் படி 07.10.2005 அன்று தமிழ்நாடு தகவல் தகவல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. தகவல் ஆணையம் ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆறு தகவல் ஆணையர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.
5. பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரும் தகவலை விரைவாக வழங்குவதற்கு பொறுப்பானவர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு இரண்டாவது நிலையில் உள்ளது. இரண்டாவது மேல்முறையீடு புகார் / மனு தாக்கல் செய்யப்படும்போது தகவலை வழங்குவதை உறுதிசெய்ய மாநில தகவல் ஆணையம் மூன்றாவது நிலையில் உள்ளது.
6. எந்தவொரு பொது அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துத் தகவல்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படலாம். மேலும், இச்சட்டமானது பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவுகளை ஆய்வு செய்வதற்கும் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அதிகாரம் அளிக்கிறது.

**இணைய வழி சேவை**

1. மேற்படி உரிமையை எளிதாக பெறும்வகையில் இச்சேவைகள் இணையவழியிலும் படிப்படியாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. அதன்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணையவழியில் (www.rtionline.tn.gov.in) கட்டணம் செலுத்தி தாக்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. 25.06.2021 முதல் மனித வள மேலாண்மைத் துறையில் மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்கள் இணையவழியில் பெறப்பட்டு தகவல்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.
4. இந்த வசதி 15.02.2022 முதல் நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி, மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை மற்றும் பள்ளிக் கல்வி ஆகிய ஐந்து துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
5. இதைத் தொடர்ந்து 20.04.2022 முதல் 11 துறைகளில் இணையவழி சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பிற துறைகளுக்கும் இது விரிவாக்கம் செய்யப்படும்.
6. இரண்டாவது மேல் முறையீடுகளையும் இணையவழியில் (Online) தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்குப் பட்டியல்கள் மற்றும் முடிவுகள் ஆணையத்தின் இணையதளத்தில் (www.tnsic.gov.in) பதிவேற்றம் செய்யப்படுகின்றன. மேலும் ஆணையத்தால் இம்மனுக்கள் காணொளி (Virtual Mode) முறையிலும் விசாரிக்கப்படுகின்றன.
7. பார்வைத்திறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் பேரில், ஆணையத்தின் ஆணைகள், பிரெய்லி எழுத்து வடிவில் வழங்கப்படுகிறது. சென்னையில் அமைந்துள்ள ''பார்வையற்ற நபர்களுக்கு அதிகாரமயமாக்குதலுக்கான தேசிய நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் இச்சேவை வழங்கப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வில் இவ்வாணையம் நாட்டிலேயே முன்னோடியாக திகழ்கிறது.
8. பொது மக்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு, விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை வழங்கும் வகையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வளாகத்தில் ஓர் உதவி மையம் (Help Desk) செயல்பட்டு வருகிறது. மேலும், ஆணையத்தில் இரண்டாவது மேல்முறையீடுகளின் நிலையை சரிபார்க்கவும் உதவுகிறது.
9. இச்சட்டத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றவும், நிலுவையில் உள்ள மனுக்களை குறைக்கவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மற்றும் மேல்முறையீடுகளை தீர்ப்பதற்கு மாநிலம் முழுவதும் உள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.
10. ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

**நிலையான வளர்ச்சி இலக்குகள்:**

1. ''மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் 3 லட்சத்திற்கும் அதிகமான தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்கள் பெறப்பட்டு அவை, தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளின்படி, பொதுத் தகவல் அலுவலர்களால் தீர்வு செய்யப்படுகின்றன.
2. ''பொதுமக்கள் அரசின் செயல்பாடுகளை தெரிந்திருத்தல் வேண்டும் என்ற குறிக்கோளை அடையும்பொருட்டு, உரிய தரவுகளை அரசு துறைகள் தாமாகவே முன்வந்து இணையதளத்தில் வெளியிட்டுள்ளன. எனவே மக்கள் பொது அதிகார அமைப்புகளை தொடர்ந்து அணுகுதல் குறையும், மேலும், விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் குறையும் (குறியீடு எண்.16.6.3).

3. பொது மக்களால் கோரப்படும் தகவல்களை, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்புக்குள் அளிக்க பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே தகவல் விவரங்களின் இணக்க சதவீதம் உயரும் (குறியீடு எண்கள்.16.6.2 மற்றும் 16.10.1).